1. தயாரிப்பின் தன்மை

வெளிநாட்டு பண அனுப்பல் ஊடாக இலங்கையில் வைப்புகள் மற்றும் சொத்துக்களின் முதலீட்டுக்கான வெளிநாட்டு நாணய/ விசேட இலங்கை ரூபா கணக்கு.

2. வாடிக்கையாளர்களுக்கு கிடைக்கும் பயன்கள்

2.1 வட்டி வீதம்

புதிய வட்டி வீதத்திற்காக https://www.peoples.lk/interest-rates/ இணையத்தளத்திற்குப் பிரவேசிக்கவும்.

2.2 உள்வரும் பண அனுப்பல் கட்டணமின்றி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது.

2.3 உங்கள் முதலீட்டுக்காக 100% பாதுகாப்பு.

3. தகைமை

3.1 இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் குடியிருக்கும் வெளிநாட்டு நபர்.

3.2 இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் குடியிருக்கும் இலங்கையில் இரட்டைப் பிரசாவுரிமை உள்ள பிரசை.

3.3 இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் குடியிருக்கும், வேறொரு நாட்டில் நிரந்தரமாக வதிகின்ற தன்மை அல்லது குடியுரிமை பெற்றுள்ள இலங்கையர்.

3.4 இலங்கைக்கு வெளியில் குடியிருக்கும் வெளிநாடொன்றில் தொழிலில் ஈடுபட்டுள்ள இலங்கை பிரசை. (புலம் பெயர்ந்தவர்களைத் தவிர்த்து)

3.5 இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி.

3.6 இலங்கைக்கு வெளியில் பதிவு செய்யப்பட்டுள்ள பங்குடைமை வியாபாரம்.

3.7 வெளிநாட்டு நிதியம், வலய நிதியம், பரஸ்பர நிதியம், அலகுக்குப் பொறுப்பான மற்றும் இலங்கைக்கு வெளியில் அமைக்கப்பட்டுள்ள வெளிநாட்டு கூட்டுநிறுவன முதலீட்டாளர்கள்.

3.8 வங்கியொன்றில் உள்வரும் முதலீட்டு கணக்கொன்றைப் பேணி வந்த மரணமடைந்த நபரின் சொத்துக்களுக்கான நிருவாகி அல்லது மரணசாதனகாரர்.

3.9 வங்கியொன்றில் உள்வரும் முதலீட்டு கணக்கொன்றைப் பேணி வந்த கம்பனியொன்றின் பெறுநர் அல்லது ஒழிக்குநர்.

4. கணக்கைத் திறப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைமுறை

4.1 கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.

https://www.peoplesbank.lk/roastoth/2021/12/550_New_2018-E.pdf

4.2 செல்லுபடியான வெளிநாட்டு கடவுச்சீட்டின் பிரதி (விண்ணப்பதாரரின் விபரம், விசா மற்றும் மாற்றுவதற்காக அங்கீகாரம் அளிக்கப்பட்டமை அடங்கிய பக்கம்). உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்ளும் (KYC) மாதிரி படிவம், மற்றும் வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை,(FATCA) மற்றும் விதிக்கப்படுகின்ற ஏனைய சம்பந்தப்பட்ட பத்திரங்கள்.

4.3 இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனி மற்றும் வெளிநாட்டு கூட்டுநிறுவன முதலீட்டாளர்கள் போன்றவற்றிற்காக தகுந்தவாறு குறித்த கணக்கைத் திறக்கும் விண்ணப்பப் படிவம். உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்க (KYC) மாதிரி படிவம், வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை, மற்றும் விதிக்கப்படுகின்ற ஏனைய சம்பந்தப்பட்ட பத்திரங்கள்.

4.4 உள்வரும் முதலீட்டுக் கணக்கைத் திறப்பதற்கு உரிய வகையில் தகுதியை உறுதிப்படுத்தும் தகவல்கள் மற்றும் ஆவணங்கள்.

5. வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் சார்பில் உள்வரும் முதலீட்டுக் கணக்கொன்றைத் திறப்பதற்காகத் தேவைப்படும் ஆவணங்கள் பற்றிய சரிபார்க்கும் பட்டியல்.

5.1 தகுந்தவாறு நிரப்பப்பட்ட கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம்.

a) வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் கம்பனிக்காக கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2022/10/235-eng.pdf

b) தனிநபர் வியாபாரத்திற்காக கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2023/10/232-Sole Proprietorship_english.pdf

c) பங்குடைமை கணக்குகளுக்காக கணக்குத் திறக்கும் விண்ணப்பப் படிவம் - ஆங்கிலம்.
https://www.peoplesbank.lk/roastoth/2023/10/229_Partnership-_eng.pdf

5.2 அனைத்து அதிகாரம் பெற்ற கையொப்பம் இடுநர்களின் கையொப்ப அட்டைகள் (கம்பனி செயலாளர் / குறித்த அதிகார சபையினால் சான்றுப்படுத்தப்பட்டது)

5.3 அனைத்து பணிப்பாளர்களிடமிருந்தும் அதிகாரம் பெற்ற கையொப்பம் இடுநர்களிடமிருந்தும் தனித் தனியாகப் பெற்றுக் கொண்ட, உங்கள் வாடிக்கையாளரை அறிந்துகொள்க (KYC) மாதிரி படிவம் மற்றும் வெளிநாட்டு கணக்குகள் வரியை இணங்கியொழுகும் சட்டத்திற்கான வெளிப்படுத்துகை.

5.4 அனைத்து பணிப்பாளர்களின் மற்றும் அதிகாரம் பெற்ற கையொப்பம் இடுநர்களின் வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் மற்றும் தேசிய அடையாள அட்டைகளின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகள்.

5.5 அனைத்து பங்குதாரர்களிடமிருந்து பெற்றுக் கொண்ட - பயன் உரித்து சம்பந்தமான படிவம் (வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட கம்பனிக்கு ஏற்புடையதாகும்.)

5.6 மின் கூற்று விண்ணப்பப்படிவம். (E Statement)

5.7 நட்டஈட்டுக் கடிதம் (தேவையானவாறு)

5.8 வெளிநாட்டில் பதிவு செய்யப்பட்ட குறித்த பதிவுச் சான்றிதழின் / கூட்டிணைக்கப்பட்ட சான்றிதழின் பிரதி.

5.9 பணிப்பாளர்களின் / அதிகாரம் பெற்ற கையொப்பம் இடுநர்களின் பெயர்ப் பட்டியல், அவர்களின் கையொப்பங்களுடன். (கம்பனி கடிதத் தலைப்பில் பெறப்பட்டது.)

5.10 கம்பனி யாப்பின் பிரதி/ வியாபாரத்தின் தன்மையை விபரிக்கின்ற குறித்த பதிவு ஆவணம்.

5.11 கம்பனி கடிதத் தலைப்பின் மீது குறிப்பிடப்பட்ட அதன் பணிப்பாளர் சபைத் தீர்மானம் (வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனிக்கு ஏற்புடையதாகும்.)

a) மக்கள் வங்கி வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவையில் உரிய கிளையில் கணக்கைத் திறத்தல்.
b) உள்வரும் முதலீட்டு கணக்கு சம்பந்தமான செயற்பாட்டு அறிவுறுத்தல்கள்.
c) மின் கூற்றுக்காக அதிகாரம் பெற்ற மின்னஞ்சல் முகவரி.
d) அற்றோனி அதிகாரப்பத்திரத்தின் விபரம் (இருப்பின்)

5.12 இலங்கையில் முதலீடு செய்யும் நோக்கத்தை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளக் கூடிய சாட்சி பத்திரங்கள்.

6. தேவையான குறைந்தபட்ச மீதி

a) உள்வரும் முதலீட்டு கணக்கு - சேமிப்பு மற்றும் நடைமுறைக் கணக்கிற்கு ஏற்புடையதாகாது.

b) உள்வரும் முதலீட்டு நிலையான வைப்புக் கணக்கிற்காக குறைந்தபட்ச மீதி தேவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

வெளிநாட்டு நாணயம்	குறைந்தபட்ச மீதி
அமெ.டொ.	1000/-
பிரி.பவுண்	750/-
யூரோ	1000/-
அவுஸ்.டொலர்	1350/-
கனே.டொலர்	1300/-
சிங்.டொலர்	1500/-
ஜப்பான் யென்	110,000/-
ஹொங்.டொலர்	8000/-
நியுசீ.டொலர்	1500/-
சுவிஸ் பிரேங்	1000/-
சுவீடி.குறோனர்	9000/-
டெனி.குறோனர்	6500/-
நோவி.குறோனர்	8750/-
சீன யுவான்	6750/-
தாய் பஹாட்	33,000/-
இந்திய ரூபாய்	80,000/-

c) உள்வரும் முதலீட்டுக் கணக்கொன்றை ஆரம்ப வைப்புத் தொகையொன்று இல்லாமல் திறக்க முடியும்.

d) 2 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு எவ்வித செயற்பாடும் இல்லாத கணக்குகள், செயற்படா கணக்கு வகைக்கு மாற்றப்படும்.

e) ஒரு வருடத்திற்கு மேல் வெற்று மீதியைக் கொண்டுள்ள கணக்குகள் தானியங்கியாக மூடப்படும்.

7. பொது

7.1 சேமிப்பு, நடைமுறை (மேலதிகபற்று மற்றும் காசோலை எடுப்பு வசதிகள் இன்றி) அல்லது இலங்கை ரூபா அல்லது வேறு எந்தவொரு வெளிநாட்டு நாணய வகையில் நிலையான கணக்கு என்ற வகையில் உள்வரும் முதலீட்டுக் கணக்கைத் திறந்து பேண முடியும். அதாவது: அமெ.டொ., பிரி.பவுண், யூரோ, அவுஸ்திரேலிய டொலர், கனேடிய டொலர், ஹொங்கொங் டொலர், சிங்கப்பூர் டொலர், ஜப்பான் யென், சுவீடி' குறோனர், நியுசீலாந்து டொலர், டென்மார்க் குறோனர்,

நோர்வேஜியன் குறோனர், சைனிஸ் யுவான், சுவிஸ் பிரேங், தாய் பாத் மற்றும் இந்திய ரூபாய்.

7.2 உள்வரும் முதலீட்டுக் கணக்குகளை தனிநபர் கணக்குகளாக வைத்துக்கொள்ள முடியும். தகைமை பெற்ற நபர்களுக்கு, மேற் குறிப்பிட்ட தகைமை தொடர்பான பந்தியில் இலக்கம் 3.1, 3.2 மற்றும் 3.3 ஆகிய பந்திகளின் கீழ் தகைமைகளைப் பூர்த்தி செய்கின்ற நெருங்கிய குடும்ப அங்கத்தினருடன் இணைந்த கணக்காகவும் வைத்துக்கொள்ள முடியும்.

8. அனுமதி பெற்ற வரவு

8.1 இலங்கைக்கு வெளியிலிருந்து, வங்கி முறைமை ஊடாக கணக்கு உரிமையாளரின் பெயரில் கிடைக்கும் வெளிநாட்டு செலாவணி பண அனுப்பல்.

8.2 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் (வெ.செ.ச.) 8வது பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட பணிப்புரைகளுக்கு உட்பட்டு சுங்கத் திணைக்களத்திற்கு வெளிப்படுத்தியதன் பின்னர் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட வெளிநாட்டு செலாவணி.

8.3 தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கு (PFCA) அல்லது IIA அல்லது ERIA (கு.ப.அ.க.) அல்லது இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு (DFCA) அல்லது இராஜதந்திர ரூபாய்க் (DRA) கணக்கு அல்லது கணக்கு உரிமையாளர் வெளிநாட்டு வங்கி அலகில் (OBU) பேணுகின்ற கணக்கு என்பவற்றிலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற பண மாற்றல்.

8.4 இரத்துச் செய்யப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட இலங்கைக்குள் பெற்ற மூலதன வருமானம் அல்லது வேறு எந்தவொரு வருமானம் மற்றும் மூலதனம் என்ற வகையில் கணக்கு உரிமையாளரின் இலங்கை ரூபாய் கணக்கிலிருந்து அல்லது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து (வி.வெ.நா.க.) அல்லது வேறொரு நபர் ஒருவரின் (அதாவது, முதலீட்டாளர் ஒருவரின், வாடகை வீட்டில் இருப்பரின் அல்லது குத்தகைக்காரர் அல்லது கொள்வனவாளர் ஆகிய வதியும் நபர் ஒருவர்) வெளிநாட்டு வங்கி அலகில் பேணுகின்ற கணக்கிலிருந்து மேற்கொள்ளுகின்ற பண மாற்றல்.

8.5 இரத்துச் செய்யப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் மற்றும் ஏற்பாடுகள் என்பவற்றின் கீழ் ஒரே உள்வரும் முதலீட்டு கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட முதலீட்டை வேறொரு நபருக்கு (அதாவது கொள்வனவாளருக்கு) விற்பனை செய்யும்போது அத்தகைய கொள்வனவாளரின் உள்வரும் முதலீட்டு கணக்கிலிருந்து, விற்பனை பணம் என்ற வகையில் மேற்கொள்ளும் பண மாற்றல்.

8.6 உள்வரும் முதலீட்டு கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மூலதன பரிவர்த்தனைக்கு உரிய நீதிமன்ற கட்டளையின் கீழான செலுத்தீட்டு கட்டணம்.

8.7 வரையறுக்கப்பட்ட மத்திய வைப்புகள் (தனியார்) முறைமை மற்றும் கொழும்பு பங்கு பரிவர்த்தனை என்பவற்றினால் தீர்மானிக்கப்படுகின்ற கணக்கு உரிமையாளருக்கு கிடைக்கும் உரித்துகள்.

8.8 இரத்துச் செய்யப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளில் அனுமதி வழங்கப்பட்டுள்ளபடி கணக்கு உரிமையாளர் கடன் பெறுநருக்கு வழங்கியுள்ள கடனை மீள அறவிட்டுக்கொள்ளும் வகையில் இலங்கையில் வதியும் நபர் ஒருவரின் (அதாவது கடன் பெறுநரின்) வெளிநாட்டு வர்த்தக கடன் பெறும் கணக்கிலிருந்து மேற்கொள்ளும் பண மாற்றல்.

8.9 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் உத்தரவு பத்திரம் பெற்ற விசேட வங்கிகளுக்கு அல்லது இலங்கை அரசுக்கு அல்லது அரச வசமுள்ள தொழில் முனைவாளர்களுக்கு (அதாவது கடன் பெறுநர்) கடன் பெறுநரின் ரூபாய் கணக்கிலிருந்து கடனை மீளச் செலுத்துவதற்காக பணத்தை மாற்றுதல்.

8.10 இலங்கை ரூபா கணக்கிலிருந்து அல்லது வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்கிலிருந்து அல்லது இலங்கையில் வதியும் நபருக்கு (அதாவது கடன் பெறுநருக்கு) அந்த உள்வரும் முதலீட்டு கணக்கின் ஊடாக கணக்கு உரிமையாளர், 2017 நவம்பர் 20ஆம் திகதி முதல் அறிவுறுத்தல் வெளியிடப்படும் திகதி வரையிலான காலத்தில் வழங்கப்பட்டுள்ள கடனை மீளச் செலுத்துதல்.

8.11 2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அறிவுறுத்தல் தொடரின் 6(e) அறிவுறுத்தலுக்கு உட்பட்டு, பெற்றுக் கொண்ட கடன் தொகையைப் பயன்படுத்தி, கணக்கு உரிமையாளர் கையகப்படுத்திக் கொண்ட வதிவிட ஆதனத்திலிருந்து பெற்றுக் கொண்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வருமானம். (2021ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க அறிவுறுத்தல் - வேறொரு நாட்டடில் நிரந்தர வதிவு விசா மீது (நிரந்தர வதிவு) இருக்கின்ற மற்றும் இரட்டை பிரசாவுரிமை கொண்டுள்ளவர்களுக்கு இலங்கைக்கு வெளியில் வதியும் இலங்கையர்களுக்கான கடன்)

8.12 முதலீட்டுக்காகச் செலுத்தப்பட்ட திகதியிலிருந்து, மூன்று மாதங்களுக்குள் அந்த உள்வரும் முதலீட்டு கணக்கின் ஊடாக அனுப்பப்பட்ட, இலங்கையில் கடனைத் தவிர்த்து (ஆரம்ப பொதுமக்கள் பங்கு விநியோகம் உட்பட) பௌதிக ரீதியில் அல்லாத மூலதன பரிவர்த்தனைகளில் கிடைக்கும் பணம், கூட்டாட்சி ஆதனத்தின் முதலீட்டில் தரப்பினர்களுக்கு இடையில் உடன்படிக்கை நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறியமை அல்லது உடன்படிக்கையை முடிவுறுத்துதல் ஆகிய காரணங்களினால்

ஆதனங்களின் அபிவிருத்தியாளர் அவருடைய வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட பணம்.

8.13 ஒரே கணக்கு உரிமையாளரின் மூலதன ரூபாய் கணக்கிலிருந்து (மூ.ரூ.க) புலம்பெயர் கொடுப்பனவை அல்லது நடப்பு வருமானத்தை மாற்றுதல்.

8.14 2020 ஏப்பிறல் 08ஆம் திகதியிட்ட இலக்கம் 2170/4இனைக் கொண்ட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் (அதற்கான ஏதும் திருத்தங்களுக்கு உட்பட்டு) மற்றும் விசேட பண வைப்புக் கணக்குகளுக்கான அறிவுறுத்தல்கள் என்பவற்றிற்கு அமைவாக கணக்கு உரிமையாளர் திறந்து பேணுகின்ற விசேட வெளிநாட்டு நாணய கணக்குகளின் வட்டி உட்பட முதிர்வடையும் பயன்கள்.

8.15 கணக்கு உரிமையாளர் இலங்கையில் அல்லது அதற்கு வெளியில் வதிகின்ற வெளிநாட்டவராக இருக்கும்போது.

a) இலங்கையில் குடியிருக்கும்போது, இலங்கைவாழ் கணக்கு உரிமையளரினால் மேற்கொள்ளப்பட்ட மூலதன பரிவர்த்தனைகளிலிருந்து கிடைக்கும் எந்தவொரு வருமானம் மற்றும், எந்தவொரு மூலதன வருமானம், கணக்கு உரிமையாளரின் சம்பளம், ஓய்வூதிய பயன்கள் (ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கை நிதியம், பணிக்கொடை, ஓய்வூதியம் உள்ளிட்ட ஏனைய ஓய்வுகால பயன்கள்.)

b) கணக்கு உரிமையாளரின் மூலதன பரிவர்த்தனை ரூபாய் கணக்கில் வருடாந்தம் அமெ.டொ.30,000/- இனை மாற்றுதல். (காலத்திற்குக் காலம் இடம்பெறும் மாற்றங்களுக்கு உட்பட்டு)

8.16 கணக்கு உரிமையாளர் இலங்கைக்கு வெளியில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியாக இருக்கும்போது, கணக்கு உரிமையாளரின் வதியாதோர ரூபாய் கணக்கில் வருடமொன்றுக்கு அமெ.டொ.30,000/- இனை மாற்றுதல். (காலத்திற்குக் காலம் இடம்பெறும் மாற்றங்களுக்கு உட்பட்டு)

8.17 கணக்கு உரிமையாளர் மரணமடைந்த ஒரு நபரின் ஆதனங்களுக்கு நிருவாகியாக அல்லது மரணசாதனகாரராக அல்லது கம்பனியொன்றின் பெறுநராக/ஒழிக்குநராக இருக்கும்போது.

a) இரத்துச் செய்யப்பட்ட செலாவணி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் அல்லது வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகள் என்பவற்றின் மூலம் அனுமதி அளிக்கப்பட்டுள்ளபடி, மரணமடைந்த நபர் அல்லது ஒழிக்கும் கம்பனி இலங்கையில் மேற்கொண்டிருந்த மூலதன பரிவர்த்தனைகளில் கிடைத்த எந்தவொரு மூலதன பணம் அல்லது எந்தவொரு வருமானம்.

b)

c) அத்தகைய மரணமடைந்த நபரின் ஒழிக்கும் கம்பனியின் உள்வரும் முதலீட்டுக் கணக்குகளிலிருந்து மாற்றப்பட்ட பணம்.

8.18 கணக்கு உரிமையாளர் பயனாளியாக இருக்கும்போது, மரணமடைந்த நபரின் ஆதனங்களுக்காக இருக்கின்ற நிருவாகி/மரணசாதனகாரர் அல்லது கம்பனி சந்தாதாரரின்Æஒழிக்குநரின் உள்வரும் முதலீட்டுக் கணக்கிலிருந்து பணத்தை மாற்றுதல்.

8.19 கணக்கில் இருந்த பணத்தின் மீது உழைத்த வட்டி.

8.20 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணைப்பொறுப்புகள் மற்றும் செலாவணி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உத்தரவு பெற்ற தீர்க்கும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பிணைப்பொறுப்புகள், கடன் பெறுதல் மற்றும் கடன் கொடுத்தல் பரிவர்த்தனைகளின் கீழ், கணக்கு உரிமையாளர் கையகப்படுத்திக் கொண்ட கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியல்படுத்தப்பட்டுள்ள பிணைப்பொறுப்புகளிலிருந்து பெற்றுக் கொண்ட விற்பனை வருமானம் உள்ளிட்ட ஏதேனும் வருமானம் அல்லது மூலதன வருமானம்.

8.21 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணைப்பொறுப்புகள் மற்றும் செலாவணி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உத்தரவு பெற்ற தீர்க்கும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, பிணைப்பொறுப்புகள் கடன் பெறுதல் மற்றும் கடன் கொடுத்தல் ஆகிய பரிவர்த்தனைகளின் கீழ், கணக்கு உரிமையாளர் பெற்றுக் கொண்ட எந்தவொரு வருமானம், செலுத்தீட்டு கட்டணம், ஓரங்கட்டப்பட்ட உற்பத்தி செலுத்தீடுகள் மற்றும் /அல்லது அத்தகைய பிணைப்பொறுப்புகள் சம்பந்தமான நட்டஈட்டுத் தொகை.

9. அனுமதி பெற்ற பற்று

9.1 கணக்கு உரிமையாளரின் பெயரிலான வெளிச்செல்லும் பண அனுப்பல்.

9.2 இலங்கையில் இலங்கை ரூபாவில் பணம் பெற்றுக்கொள்ளுதல்.

9.3 அந்தக் கணக்கு உரிமையாளரின் தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கு அல்லது உள்வரும் முதலீட்டுக் கணக்கு அல்லது இராஜதந்திர வெளிநாட்டு நாணய கணக்கு அல்லது இராஜதந்திர ரூபாய் கணக்கு அல்லது வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்கிற்கு பணத்தை மாற்றுதல்.

9.4 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகள் என்பவற்றிற்கு உட்பட்டு, வழங்கப்பட்டுள்ள அனுமதிக்கு அமைவாக, கணக்கு உரிமையாளரால் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட மூலதன பரிவர்த்தனை சம்பந்தப்பட்ட செலுத்தீடு.

a) முதலீட்டின், முதலீட்டாளரின் / விற்பனையாளரின் (வதிவிடம் உள்ளவரின்) ரூபாய் கணக்கிற்கு.

b) வெளிநாட்டு செலாவணி ஒழுங்குவிதி அல்லது அத்தகைய முதலீட்டாளருக்கு/வழங்குபவருக்கு வழங்கப்பட்டுள்ள விசேட அனுமதி பிரகாரம், அப் பணத்தை வெளிநாட்டு நாணயத்தில் பெற்றுக்கொள்ளுவதற்கு முதலீட்டாளருக்கு அல்லது வழங்குபவருக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தால், வதிகின்ற முதலீட்டாளரின் அல்லது வழங்குபவரின் வெளிநாட்டு நாணய கணக்கிற்கு.

c) அனுமதி பெற்ற முதலீட்டை கொள்வனவு செய்வது சம்பந்தமாக வேறொரு நபரின் (அதாவது விற்பனையாளரின்) உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு.

d) முதலீடு கூட்டாட்சி ஆதனமொன்றைக் கொள்வனவு செய்வதற்காகவெனில் ஆதன அபிவிருத்தியாளரின் வியாபார வெளிநாட்டு நாணய கணக்கிற்கு.

e) முதலீட்டுச் சபை சட்டத்தின் கீழ், இலங்கைக்கு மேற்கொள்ளுகின்ற முதலீடு சம்பந்தமாக வெளிநாட்டு செலாவணி சட்டத்தில் குறித்த ஏற்பாடுகளிலிருந்து முதலீட்டாளர் விடுவிக்கப்பட்டிருந்தால், முதலீட்டாளரின் வெளிநாட்டு வங்கி அலகில் பேணப்படுகின்ற கணக்கு.

9.5 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ், உத்தரவு பத்திரம் பெற்ற வாணிப வங்கிக்கு அல்லது இலங்கை அரசுக்கு அல்லது அரச வசமுள்ள தொழில் முனைவாளர்களுக்கு (அதாவது கடன் பெறுநர்) அல்லது வழங்கப்பட்டுள்ள கடன் தொகையை பெறுபவரின் ரூபாய் கணக்கிற்கு மாற்றுதல்.

9.6 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை, உத்தரவு பத்திரம் பெற்ற வாணிப வங்கிகளுக்கு அல்லது உத்தரவு பத்திரம் பெற்ற விசேட வங்கிகளுக்கு (அதாவது கடன் பெறுநரின்) அல்லது அத்தகைய கடன் பெறுவதை மேற்கொள்ளுவது வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் கடன் பெறுநரின் வெளி முதலீட்டுக்காக நிதியிடுவதற்கெனில், கடன் பெறுநரின் வெளிச் செல்லும் முதலீட்டு கணக்கிற்கு (வெ.மு.க.) மாற்றுதல்.

9.7 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ் வழங்கப்பட்டுள்ள கடன் தொகை இலங்கையில் வதிகின்ற நபரின் (அதாவது கடன் பெறுநரின்) வெளி வாணிப கணக்கிற்கு மாற்றுதல்

9.8 வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ், இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனி (அதாவது முதலீட்டாளர்) வழங்குகின்ற பங்குகள், கடன் பிணைப்பொறுப்புகளில் முதலீட்டுக்கு உரிய செலுத்தீடுகள், வெளிநாட்டு செலாவணி சட்டத்தின் ஒழுங்குவிதிகள் அல்லது ஏற்பாடுகளின் கீழ், முதலீட்டாளரின் வெளி முதலீட்டுக்காக நிதியைத்

தயாரிக்கும் நோக்கத்திற்காக அத்தகைய முதலீடுகளிலிருந்து கிடைக்கும் பணத்தைப் பயன்படுத்துவதாக இருந்தால், முதலீட்டாளரின் உள்வரும் முதலீட்டு கணக்கில் பற்று வைத்தல்.

9.9 உள்வரும் முதலீட்டு கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்பட்ட மூலதன பரிவர்த்தனைக்கு உரிய நீதிமன்ற கட்டளையின் கீழான செலுத்தித் தீர்க்கும் கட்டணம்.

9.10 வரையறுக்கப்பட்ட மத்திய வைப்புகள் முறைமை (தனிப்பட்டது) மற்றும் கொழும்பு பங்குச் சந்தையினால் தீர்மானிக்கப்படுகின்ற கணக்கு உரிமையாளர்களால் செலுத்தப்பட வேண்டிய உரித்துகள்.

9.11 கணக்கு உரிமையாளர், மரணமடைந்த நபர் ஒருவரின் ஆதனங்களின் நிருவாகியாக / மரணசாதனகாரராக அல்லது கம்பனி சந்தாதாரராக / ஒழிக்குநராக இருக்கும்போது.

a) பயனாளியின் பெயரில் அல்லது நிருவாகி / மரணசாதனகாரர் அல்லது கம்பனி சந்தாதாரர் / ஒழிக்குநர் பெயரில் வெளிச் செல்லும் பண அனுப்பல்.

b) பயனாளியின் உள்வரும் முதலீட்டு கணக்கிற்கு மாற்றுதல்.

c) பயனாளி இலங்கையில் குடியிருக்கின்ற நபர் எனில் இலங்கை ரூபாய் கணக்கிற்கு அல்லது அவருடைய தற்பொழுதுள்ள தனிநபர் வெளிநாட்டு நாணய கணக்கிறக்கு மாற்றுதல்.

9.12 2021ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இலங்கை பிணைப்பொறுப்புகள் மற்றும் செலாவணி ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உத்தரவு பெற்ற தீர்க்கும் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட சட்டங்கள் ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக, பிணைப்பொறுப்புகள் கடன் பெறுதல் மற்றும் கடன் கொடுத்தல் ஆகிய பரிவர்த்தனைகளின் கீழ், கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலப்படுத்தப்பட்டுள்ள பிணைப்பொறுப்பு கடன் பெறுதலுக்கு அமைவாக கணக்கு உரிமையாளர் செலுத்த வேண்டிய செலுத்தீடு, தயாரிப்பு செலுத்தீடு, ஓரங்கட்டப்பட்ட மற்றும் / அல்லது நட்டஈட்டு செலுத்தீடுகள் உட்பட.

10. கட்டணம் மற்றும் அறவீடு

விகிதாசார மற்றும் வரி அறவிடலுக்காக கீழுள்ள இணையத்தளத்திற்குள் பிரவேசிக்கவும்.

https://www.peoplesbank.lk/roastoth/2024/10/Foreign-English.pdf